මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல : LAE/2024/EPS/01** **2024. 08.26**

# உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் - 2024

## எல்பிட்டிய பிரதேச சபை

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 26 ஆம் பிரிவின் கீழ் எல்பிட்டிய பிரதேச சபையின் தவிசாளரையும் உப தவிசாளரையும் அதன் உறுப்பினர்களையும் தெரிவுசெய்வதற்கான தேர்தலுக்கான பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்கும் அறிவித்தல், எல்பிட்டிய பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரினால் 2024 ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி பிரசித்தப்படுத்தப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றினால் அல்லது சுயேச்சைக் குழுவொன்றினால் முதலாவது பெயர் குறித்த நியமனப்பத்திரத்திலும் இரண்டாவது பெயர் குறித்த நியமனப்பத்திரத்திலும் பெயர் குறித்து நியமிக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையும், முதலாவது மற்றும் இரண்டாவது பெயர் குறித்த நியமனப்பத்திரங்களில் உட்சேர்க்கப்பட வேண்டிய பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கையும், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றினால் அல்லது சுயேச்சைக் குழுவொன்றினால் வைப்புச் செய்யப்பட வேண்டிய வைப்புப் பணம் பற்றிய தகவல்களும் உரிய பெயர் குறித்த நியமன அறிவித்தலிலும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2398/17 ஆம் இலக்க, 2024 ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளதென்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

தேர்தல் ஆணைக்குழுவின் www.elections.gov.lk என்ற உத்தியோகபூர்வ இணையதளத்திலும் இத்தகவல்கள் பிரசித்தப்படுத்தப்பட்டுள்ளதென்பது மேலும் அறிவிக்கப்படுகிறது.

தேர்தல் ஆணைக்குழுவின் ஆணைப்படி,

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்